# கே.சி.பி. சுகர் & இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

K SUGAR C AND P IND COR

CIN : நிறுவன அடையாள எண்.L15421TN1995PLC033198

பதிவு அலுவலகம் : "இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்" எண்.239, அண்ணாசாலை, சென்னை–600 006.

தொலைபேசி எண். : 91 44 28555171-176 தொலைநகல் : 914428546617

மின்அஞ்சல் : investorservices@kcpsugar.com வலைதளம் : www.kcpsugar.com

## 23-வது ஆண்டு பொதுக்கூட்டம், மின்னனு வாக்குப்பதிவு தகவல் மற்றும் பதிவேடு மூடல் பற்றிய அறிவிப்பு

நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 101–ன் படி நிறுவனத்தின் 23–வது ஆண்டு பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 14, 2018 (14.09.2018) அன்று காலை 10:00 மணி அளவில் சத்குரு ஞானானந்தா ஹால், நாரத கான சபா, எண்.314, T.T.K. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை–18 என்ற இடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 91, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 விதி 10ன் படியும், இந்திய பங்குப் பத்திரங்கள் பரிமாற்றக் குழுவின் (SEBI) பட்டியல் பதிவுக் கடமைகள் மற்றும் தகவல் அளிப்பு விதிமுறைகள், 2015 (LODR REGULATIONS, 2015) பிரிவு 42–ன் படியும் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்குமாற்றுப் பதிவேடுகள் வியாழக்கிழமை, செப்டம்பர் 6, 2018 (06.09.2018) முதல் வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 14, 2018 (14.09.2018) வரை இரு தினங்களும் உட்பட, 31.03.2018 அன்று முடிவடைந்த நிதி ஆண்டின் பங்குதாரர்களுக்குரிய இலாபப் பங்கு உரிமையை உறுதி செய்யும் வகையில் மூடப்பட்டிருக்கும்.

25–05–2018 அன்று நடந்த இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ரூ.1/– முகமதிப்பு உள்ள பங்கிற்கு ரூ.0.10 (10 விழுக்காடுகள்) இலாபப்பங்காக அளிக்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இப்பரிந்துரையை ஆண்டு பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்கள் ஒப்புதல் அளித்தால், அந்த இலாபப்பங்கு 14.09.2018 அன்று அல்லது அதன் பின்னர் (நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள்) வழங்கப்படும்.

நிறுவனச் சட்டம் 2013 பிரிவு 101ன் படியும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 – விதி 18ன் படியும் இந்தியப் பங்குப் பத்திரங்கள் பரிமாற்றக் குழுவின் (SEBI) பட்டியல் பதிவுக் கடமைகள் மற்றும் தகவல் அளிப்பு விதிமுறைகள், 2015 (LODR REGULATIONS, 2015) பிரிவு 36–ன் படியும், இந்திய நிறுவனச் செயலாளர்கள் கழகம் (ICSI) வகுத்த பொதுக் கூட்டங்கள் செயல்முறை விதிகள் 2–ன் படியும் (SS-2), மின்னஞ்சல் முகவரியை முன்னரே நிறுவனத்திடமோ அல்லது முதலீட்டுப் பங்கேற்பாளரிடமோ பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு நிறுவனத்தின் 23–ம் ஆண்டு பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் பொதுக் கூட்டத்தில் செயல்படுத்த உள்ள வழக்கமான மற்றும் சிறப்பு அலுவல்கள் பற்றிய தகவல் அறிக்கை, ஆண்டு அறிக்கை, வருகைச் சீட்டு மற்றும் பிரதிநிதிப் படிவம் அடங்கிய அனைத்து ஆவணங்களும் பதிவு செய்யப்பட்ட மின்னனு முகவரிக்கு ஆகஸ்ட் 20, 2018க்குள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு மேற்கூறிய அனைத்து ஆவணங்களும் அனுமதிக்கப்பட்ட அஞ்சல் முறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தங்கள் மின்னனு முகவரியை ஏற்கனவே பதிவு செய்துள்ள பங்குதாரர்களும் விரும்பினால் 23–ம் ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அனைத்து ஆவணங்களையும் அஞ்சல் மூலம் இலவசமாக பெறலாம்.

நிறுவனச் சட்டம், 2013, பிரிவு 108–ன் படியும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்த விதிகள் 2015 – விதி 20–ன் படியும் SEBI (LODR REGULATIONS, 2015) விதி 44ன் படியும் ICSI வகுத்த பொதுக்கூட்டங்கள் செயல்முறை விதிகள் 2ன் படியும் (SS-2) பங்குதாரர்கள் நிறுவனத்தின் 23–ம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் செயல்படுத்த உள்ள வழக்கமான மற்றும் சிறப்பு அலுவல்கள் குறித்த தீர்மானங்கள் மீதான மின்னனு வாக்குப்பதிவு செய்ய NSDL நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மின்னனு வாக்குப்பதிவு செய்ய தகுதியான பங்குதாரர்கள் 14.09.2018 அன்று நிறுவனத்தில் வைத்துள்ள பங்குகளின் அடிப்படையில் உறுதி செய்யப்படுவர்.

07.09.2018 அன்று நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேட்டில் பதிவான அனைத்து உறுப்பினர்களும் அவர்கள் வைத்துள்ள பங்குகளின் அடிப்படையில் தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு செய்யவும் அல்லது 23–ம் ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாக்குச் சீட்டின் மூலம் வாக்களிக்கவும் உரிமை பெற்றவராவர்.

23–ம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் அனைத்து ஆவணங்களும் பங்குதாரர்களுக்கு அஞ்சல் செய்யப்பட்ட தேதிக்கு (07.09.2018) பின்னர், ஆனால் 07.09.2018 தேதிக்கு முன்னர் நிறுவனத்தில் பங்குதாரர்கள் ஆகும் பங்குதாரர்கள் evoting@nsdl.co.in என்ற மின்னனு முகவரியிலோ அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவரான "இண்டக்ரேட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனத்திடமோ தொடர்பு கொண்டு மின்னனு பதிவு சொல் (Login ID) மற்றும் கடவுச் சொல் (Password) பெற்றுக் கொள்ளலாம்.

பங்குதாரர்கள் மின்னனு வாக்குப் பதிவு குறித்த தகவல்கள் அறிய நிறுவனத்தின் 23–ம் ஆண்டு பொதுக்கூட்ட ஆண்டு அறிக்கையில் இடம்பெற்றுள்ள மின்னனு வாக்குப் பதிவு தகவல்கள் குறிப்பைக் காணலாம் அல்லது கீழ்கண்ட முகவரிகளில் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

**நேஷனல் செக்யூரிட்டீஸ் டெப்பாஸிட்டரி லிமிடெட்**, ட்ரேட் வேர்ல்ட், 4 மற்றும் 5வது தளம் கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பபத்மார்க் லோயர் பரேல், மும்பை 400 013. தொலைபேசி எண் : 022-24994600, மின் அஞ்சல் : evoting@nsdl.co.in
**தொடர்பு கொள்ளவேண்டிய நபர்** : திரு.ராஜீவ் ரஞ்சன் (rajivr@nsdl.co.in); தொலைபேசி எண் : 022-24994738
கட்டணமில்லா தொலைபேசி எண் : 1800 222 990

**இண்டக்ரேட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட்**, 2வது தளம், கென்சஸ் டவர்ஸ், எண்.1, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 600 017. தொலைபேசி எண் : 044-28140801-04
மின் அஞ்சல் : kalyan@integratedindia.in
**தொடர்பு கொள்ளவேண்டிய நபர்** : திரு. K. பாலசுப்ரமணியன், துணை பொது மேலாளர் / திரு. R. கல்யாண ராமன், மூத்த மேலாளர்

**கே.சி.பி. சுகர் அண்ட் இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**, பதிவு அலுவலகம் : "இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்"
எண்.239, அண்ணாசாலை, சென்னை–600 006. தொலைபேசி எண் : 044-28555171-76 மின் அஞ்சல் : kcpsugar@vsnl.com
**தொடர்பு கொள்ளவேண்டிய நபர்** : திரு. S. சிதம்பரம், பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலர்

மின்னணு வாக்குப்பதிவு குறித்த தகவல்கள் மேலுமறிய நிறுவனத்தின் 23–ம் ஆண்டு நிதிநிலை ஆண்டு அறிக்கையில் காணப்படும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்கள் பகுதியைப் பார்க்க வேண்டுகிறோம். மேலும் NSDL–ன் வலைதளம் http://www.evoting.nsdl.com மூலம் அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள் பகுதி வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செவ்வாய்க்கிழமை செப்டம்பர் 11, 2018 (11.09.2018) அன்று காலை 9:00 மணிக்கு துவங்கும். வியாழக்கிழமை செப்டம்பர் 13, 2018 (13.09.2018) அன்று மாலை 5:00 மணிக்கு முடிவடையும். இந்த காலவரையறைக்குப் பின்னர் NSDL நிறுவனம் மின்னணு வாக்குப்பதிவு வசதியை தடை செய்துவிடும். ஒருமுறை மின்னணு வாக்குப்பதிவு செய்த பங்குதாரர் அதை பின்னர் மாற்ற இயலாது. மின்னணு வாக்குப்பதிவு செய்த பங்குதாரர்களும் நிறுவனத்தின் 23–ம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்க தடை எதும் இல்லை. ஆயினும் அவர்கள் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் பொதுக்கூட்ட நாளன்று (14.09.2018) நடைபெற உள்ள வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்க இயலாது.

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தப்பட்ட விதிகள், 2015–விதி எண்.20(4)(ii)(B)ன் படியும், இந்திய நிறுவனச் செயலர்கள் கழகம் வகுத்த பொதுக்கூட்டங்களுக்கான செயல்முறை விதிகள் 2–ன் படியும் (SS-2), மின்னணு வாக்குப்பதிவு மூலம் [illegible] பங்குதாரர்களுக்கான நிறுவனத்தின் 23–ம் ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் பொதுக்கூட்ட நாளன்று (14.09.2018) வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்க [illegible] செய்துள்ளது.

V [illegible] அண்ட் அசோசியேட்ஸ் என்ற தொழில்முறை நிறுவனச் செயலாளர்களை (சான்றிதழ் எண்.2473) நிறுவனத்தின் 23–ம் ஆண்டு பொதுக்கூட்டம் தொடர்பான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் பொதுக்கூட்ட நிகழ்விடத்தில் கூட்ட நாளன்று (14.09.2018) செயல்படுத்த உள்ள வாக்குச்சீட்டு முறை வாக்குப் பதிவு சீராகவும், வெளிப்படையாகவும் நடைபெற உதவும் ஆய்வாளராக நிறுவனம் நியமித்துள்ளது.

வாக்குப்பதிவு முடிவுகள் மற்றும் ஆய்வாளரின் அறிக்கை நிறுவனத்தின் வலைதளமான www.kcpsugar.vsnl.com மற்றும் NSDL நிறுவனத்தின் வலைதளத்திலும் நிறுவனத்தின் அவைத் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் வாக்குப்பதிவு முடிவுகளை வெளியிட்ட உடனேயே இடம்பெறும். இந்த வாக்குப்பதிவு முடிவுகள் தேசிய பங்குச் சந்தை (NSE) மற்றும் மும்பை பங்குச் சந்தை (BSE) ஆகியவற்றிற்கும் அறிவிக்கப்படும்.

23–ம் ஆண்டு பொதுக்கூட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் நிறுவனத்தின் அனைத்து வேலை நாட்களிலும் மதியம் 2:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை பொதுக்கூட்ட நாள் (14.09.2018) வரை பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். மேலும் இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் வலைதளத்திலும், NSDL நிறுவனத்தின் வலைதளமான http://www.evoting.nsdl.com பங்குதாரர்களின் கவனத்திற்காக இடம்பெறும்.

பொதுக்கூட்ட நுழைவு அனுமதி உறுப்பினர்களின் வருகைச் சீட்டு / பிரதிநிதி படிவம் மூலம் முடிவு செய்யப்படும்.

பங்குதாரர்கள் தங்கள் ஐயங்களை பொதுக்கூட்ட நாளுக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் நிறுவனத்திற்குத் தெரிவித்தால் உரிய விளக்கங்கள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அளிக்கப்படும்.

இடம் : சென்னை
தேதி : 20–08–2018

இயக்குநர் குழுவின் ஆணைப்படி
கே.சி.பி. சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன் லிமிடெட்டிற்காக
இர்மகார்ட் வெலகபுடி எம்.ராவ், நிர்வாக இயக்குநர்

குறிப்பு : 23–ம் ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு வருகை புரிந்து வாக்களிக்கத் தகுதியுள்ள பங்குதாரர்கள் தங்களுக்கு பதிலாக ஒரு பிரதிநிதியை நியமிக்கலாம். அந்தப் பிரதிநிதி நிறுவனத்தின் பங்குதாரராக இருக்கவேண்டிய கட்டாயமில்லை. பிரதிநிதியை நியமிக்கும் படிவங்கள், ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும் தேதி மற்றும் நேரத்திற்கு (14–09–2018 காலை 10:00 மணி) 48மணி நேரம் முன்னர் நிறுவனத்தில் அளிக்கப்பட வேண்டும். ஒருவர் அதிகபட்சம் ஐம்பது பங்குதாரர்களுக்கான பிரதிநிதியாக மட்டுமே இருக்க இயலும். அந்த ஐம்பது பங்குதாரர்கள் நிறுவனத்தின் மொத்த பங்குகளில் 10 விழுக்காடு பங்குகளுக்குமேல் வைத்திருக்கக்கூடாது. நிறுவனத்தின் மொத்த பங்குகளில் 10 விழுக்காடுகளுக்கு மேல் பங்கு வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் பிரதிநிதியாக ஒருவரை மட்டுமே நியமிக்க இயலும். அவ்வாறு நியமிக்கப்பட்ட பிரதிநிதி வேறு எந்த பங்குதாரர்களுக்கும் பிரதிநிதியாக செயல்பட இயலாது.

Malai Sudar 20.08.2018